DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:S.C.53/2022

Prosecution Witness P.W.3

| | |
|---|---|
| Name : **திரு.அர்ஜூனன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

**எதிரிகள் 1 முதல் 5 மற்றும் 7, 8 ஆஜர், 6 வது எதிரி இறப்பு.**

**நாள்: 06.10.2025.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் பெருமாள் கோவில் பட்டியில் குடியிருந்து வருகிறேன். நத்தத்தில் கிரேன் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ஜெகதீஷ், இறந்து போன நவீன்குமார் அவர்களை எனக்கு தெரியும். எனக்கு சாட்சி சசிக்குமாரையும் தெரியும். எனது அம்மாச்சி ஊரான அணைக்கரைப்பட்டியைச் சேர்ந்தவர்கள். இறந்து போன நவீன் குமார் எனது மாமா முறை வேண்டும், எனக்கு தூரத்து உறவினர். அவர் எங்கள் ஊருக்கு பக்கத்தில் உள்ள விவசாயக் கல்லூரியில் அவர் கிளர்க்காக வேலை செய்து வருகிறார். அவர் மூலம் தான் எனக்கு எதிரிகளை பழக்கம். அணைக்கரை பட்டியில் உள்ள மயானத்திலும், குள்ளப்புரத்தில் உள்ள அமாவாசை, பரமசிவம் ஆகியோர்களுக்கு சொந்தமான காலனி குடிசை வீடு உள்ளது, அங்கு எல்லோரும் நாங்கள் ஒன்றாக கூடி அடிக்கடி மது அருந்துவது வழக்கம், அந்த வகையில் எனக்கு எதிரிகளை தெரியும்.

2. எனக்கு இறந்து போன நவீன்குமார் செல்போன் நம்பர் தெரியும் அது 96590 90871. கடந்த 15.01.2021-ம் தேதியன்று அன்றைய தினம் பொங்கல்

திருவிழா என்பதால் எனது அம்மாச்சி ஊரான அணைக்கரைப்பட்டிக்கு நான் சென்றிருந்தேன்.அப்போது நான், இறந்து போன நவீன் குமார், சசிகுமார், ஜெகதீஷ் மாலை 06.00–07.00 மணியளவில் எங்கள் ஊரான அணைக்கரைப்பட்டி சுடுகாட்டுக்கு சென்று நிழற்குடையில் உட்கார்ந்து மது அருந்திக் கொண்டிருந்தோம். அப்பொழுது நவீன்குமாருக்கு அவரது செல்போனில் போன் வந்தது. செல்போனில் யார் என கேட்ட போது முதல் எதிரி நேசமணி அவருக்கு போன் செய்ததாக தகவல் சொன்னார். நேசமணியும், நவீன் குமாரும் போனில் மாறி, மாறி பேசி சத்தம் போட்டுக் கொண்டார்கள்.

3. நவீனிடம் என்னவென்று கேட்டபோது அன்றைய தினம் அமாவாசை மற்றும் பரமசிவம் ஆகியோர்களது காலி குடிசை பகுதிக்கு சென்றிருந்ததாகவும், அங்கு மது அருந்த சென்றபோது அங்கு இருந்த நாய் அவரை பார்த்து குழைத்ததாகவும் அந்த நாயை அவர் எத்தி தள்ளியதாகவும், பரமசிவம் மற்றும் அமாவாசை இருவரும் நாயை இவ்வாறு செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் இங்கு வரக்கூடாது என அவர்களிடம் சத்தம் போட்டதாகவும், அதற்கு நவீன் குமார் நாயை இவ்வாறு தான் எத்துவேன் என்றும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என தெரிவித்தார் என்றும், இவ்வாறு செய்தால் குடிசை காலி செய்து விடுவதாகவும் நவீன் குமார் மிரட்டி உள்ளார். அது சம்பந்தமாக வாக்குவாதம் ஏற்பட்டு பிரச்சனை நடந்ததாக நவீன்குமார் எங்களிடம் சொன்னார். பேசிக் கொள்ளலாம், என நாங்கள் இருந்தோம். ஒரு அரை மணி நேரம் கழித்து இரண்டு பைக்குகளில் ஆட்கள் வந்தார்கள் மொத்தம் 8 பேர் வந்தார்கள்.

4. அணைக்கரை பட்டியைச் சேர்ந்த மனோஜ்குமார் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 8 ம் எதிரியை சாட்சி அடையாளம் காட்டி அவர் மற்ற நபர்களிடம் இங்கே நவீன் குமார் இருப்பதாகவும் அவரை குத்திக் கொள்ளுங்கள் என சொன்னார். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள மற்ற எதிரிகள் பெயர் நேசமணி, கார்த்தி, செல்வமணி,பிரபு பாண்டி, தங்க பாண்டி, சிவக்குமார் மற்றும் மற்றும்

மனோஜ் குமார் ஆகியோர்களை சாட்சி நீதிமன்றத்தில் பார்த்து பெயர் குறிப்பிடுகிறார். நேசமணி நவீன்குமாரை பார்த்து காலையில் குடித்துவிட்டு வந்து தனது தாத்தாவைப் பார்த்து தாத்தா கேள்வி கேட்டவுடன் அடித்து தள்ளிவிட்டு வந்து விட்டாய் என சொல்லி வாக்குவாதம் அவர்கள் செய்தார்கள். அவ்வாறு செய்து கொண்டிருக்கும்போது உடன் வந்தவர்கள் என்னையும், ஜெகதீஷ் மற்றும் சசிகுமார் ஆகிய மூவரையும் மற்ற எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள். காலையில் சொன்னதைக் கேட்க மாட்டேன் என வந்துவிட்டாய் உன்னை குத்திக் கொள்ளாமல் விடமாட்டேன் என நேசமணி, நவீன் குமாரை நெஞ்சில் அடித்து கீழே தள்ளிவிட்டார்.

5. நிழகுடையின் படிக்கட்டில் நவீன் குமார் கீழே விழுந்தார். ஒரு பக்கம் சிவக்குமாரும் மறுபக்கம் செல்வமணியும் சென்று நவீன்குமாரை பிடித்துக் கொள்ள நேசமணி மறைத்து வைத்திருந்த கத்தியை வைத்து நவீன்குமாரின் நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டு இடது பக்கம் மார்பிலும், மேல் மார்பிலும் அந்த கத்தியால் ஓங்கி நேசமணி குத்தினார். வலது பக்க தலை பகுதியிலும் அதே கத்தியால் நவீன் குமார் தலையில் குத்திவிட்டார். அங்கிருந்து பிடித்துக் கொண்டிருந்த நபர்களிடமிருந்து ஜெகதீஷ் தப்பித்து ஓடி வந்து நவீனை காப்பாற்ற வந்தபோது கார்த்தி என்ற எதிரி தான் மறைத்து வைத்திருந்த கத்தி எடுத்து ஜெகதீஷன் கழுத்தில் செத்துப் போடா என குத்தினார். ஜெகதீஷ் சுதாரித்து குனிந்து கொள்ள ஜெகதீசன் பின்பக்க புடனியில் அந்த குத்து காயம் பட்டது. அதே கத்தியை உருவி கார்த்திக் ஜெகதீஷ் மீது வீச அவரது மூக்கு மற்றும் இடது பக்க கன்னத்தில் காயம் ஏற்பட்டது.

6. உடன் இருந்த மற்ற நபர்கள் என்னையும், சசிகுமாரையும் கீழே அடித்து தள்ளி கல்லை கொண்டு எரிந்து காலால் எங்களை ஏத்தி உதைத்தார்கள். எனக்கு இடது பக்க கழுத்தில் கல்லால் எரிந்த காயம் ஏற்பட்டது. நேசமணி கையில் வைத்திருந்த கத்தியை கொண்டு மற்ற யாரும் வரக்கூடாது என்றும், வந்தால் மற்றவர்களையும் குத்தி விடுவேன் என மிரட்டினார். சசிகுமார்

அங்கிருந்து தப்பித்து ஊருக்குள் ஓடிச் சென்றார்.. ஊருக்குள் பொங்கல் பரிசுவிழா நடந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்த நவீனின் அப்பாவிடம் இது பற்றி சசிகுமார் முறையிட ஊர்க்காரர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சசிகுமார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார்.

7. வந்த பைக்கிலேயே எதிரிகள் எல்லோரும் கிளம்பிச் சென்றார்கள். நவீனுக்கு அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டு என்னையும், நவீனையும், ஜெகதீசையும் மொத்தமாக எல்லோரும் சேர்ந்து தூக்கிச் சென்றார்கள். எனக்கு ரத்த காயம் ஏற்பட்டது. எனக்கு மயக்கம் ஏற்படவில்லை. நான் சுயநினைவுடன் தான் இருந்தேன். எங்கள் ஊரில் ஜே.பி என்பவர் TATA ACE வண்டி வைத்திருந்தார் அவரது உதவியுடன் நவீன் குமாரை தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். வழிப்போக்கில் வந்த ஆட்டோ உதவியுடன் என்னையும், ஜெகதீஷ் மற்றும் சசிக்குமாரையும் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக எங்களை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

8. நாங்கள் க.விலக்கு மருத்துவமனை சென்றபோது அங்கே புகார்தாரர் பழனிச்சாமி அங்கு வந்தார். நாங்கள் நவீன் குமாரை பற்றி விசாரித்தபோது அவர் இறந்த செய்தி தெரிந்து கொண்டோம். போலீசார் மறுநாள் என்னை மருத்துவமனையில் இருந்து விசாரணை செய்தார்கள். நான்கு நாட்கள் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து, ஊருக்கு சென்றுவிட்டேன். ஜெகதீஷ் சுமார் 10 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். இந்த சண்டை நடந்தது சுமார் 15 நிமிடம் இருக்கும். 2 வது எதிரி கார்த்தி ஓட்டி வந்த பைக் ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் பிளஸ் கருப்பு மற்றும் நில நிறம் கொண்ட வண்டி, அதன் எண் நான் கவனிக்கவில்லை. நேசமணி ஓட்டி வந்த வாகனம் பல்சர் வண்டி அதுவும் கருப்பு நிறம் அதன் எண்ணும் நான் கவனிக்கவில்லை.

9. சம்பவ இடமான சுடுகாட்டில் இரண்டு மின்விளக்குகள் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் அந்த வெளிச்சத்தில் என்னால் எதிரிகளை அடையாளம் காண முடிந்தது. எங்களை தாக்க பயன்படுத்திய கத்திகளை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய சா.பொ.3 நேசமணி, நவீன்குமாரை தாக்க பயன்படுத்திய கத்தி. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய சா.பொ.4 கார்த்தி, ஜெகதீசனை தாக்க பயன்படுத்திய கத்தி. என்னை குறிப்பாக எதிரி கார்த்தி பின் பக்கமாக எனது கையைப் பிடித்து கொண்டார். ஜெகதீஷ், நவீன்குமாரை காப்பாற்ற ஓடும்போது கார்த்தி என்னை விட்டுவிட்டு ஜெகதீஷ் குமாரை தாக்க சென்றார்.

10. காலையில் நடந்த சம்பவம் தொடர்பாகத்தான் இந்த பிரச்சினை நடந்துள்ளது, இந்த பிரச்சனைக்கான காரணம் இதுதான்.சுடுகாட்டிற்கும் திருவிழா நடந்து கொண்டிருந்த மந்தைக்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும் இரண்டு பெண்டு திரும்பினால் மந்தை வந்துவிடும். எதிரிகள் பயன்படுத்திய பைக்கை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும்.என்னிடம் காண்பிக்கக் கூடிய புகைப்படத்தில் காணப்பட்டுள்ள பல்சர் மற்றும் ஹீரோ ஹோண்டா ஸ்ப்லெண்டர் பைக் தான் எதிரிகள் சம்பவத்தன்று ஓட்டி வந்த பைக்காகும் அவை சா.பொ.5 மற்றும் 6. பல்சர் வண்டியை எதிரி நேசமணி ஓட்டி வந்தார். ஹீரோ ஹோண்டா பைக்கை எதிரி கார்த்தி ஓட்டி வந்தார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.10.06 18:18:06 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.